

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நேற்று (14.11.2024) காட்டுமன்னார்கோயில் திமுக அலுவலகத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். உடன் கோ.ஐய்யப்பன் எம்.எல்.ஏ., கழக பொறியாளர் அணி செயலாளர் துரை.கி.சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள் அ.முத்துசாமி, தங்க.ஆனந்தன், அ.நாராயணசாமி, த.சங்கர், வி.கோவிந்தசாமி, முத்து.பெருமாள் ஆர்.கலையரசன், பி.சுந்தரபாண்டியன், கே.ஆர்.ராயர், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், எம்.மனோகரன், டி.திருமூர்த்தி, எஸ்.செந்தில்குமார், கே.ஆர்.கோவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## டெல்லி மேயர் தேர்தல்: ஆம் ஆத்மி வெற்றி!

புதுடெல்லி, நவ.15

நடப்பு ஆண்டில் டெல்லி மேயர் மற்றும் துணை மேயர் பதவிகளுக்கான தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் 26ந்தேதி நடக்கவிருந்தது. இந்த மேயர் மற்றும் துணை மேயர் தேர்தலுக்கு ஆம் ஆத்மி, பா.ஜ.க.வின் வேட்பாளர்கள் ஏப்ரல் 13–ந்தேதியே வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். எனினும், பல்வேறு காரணங்களால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், டெல்லியில் மேயர் மற்றும் துணை மேயர் தேர்தல் இன்று நடைபெற்றது. டெல்லியில் உள்ள முனிசிபல் மாநகராட்சி கட்டிடத்தில் மதியம் 2 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. இந்த தேர்தலில் எந்த இடையூறும் ஏற்படாமல் இருக்க அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

இந்த தேர்தலில், ஆம் ஆத்மி கட்சி சார்பில் வேட்பாளராக மகேஷ் குமார் கிச்சி (தேவ் நகர் வார்டு) போட்டியிட்டார். பா.ஜ.க. வேட்பாளராக கிஷன் லால் (ஷகுர்பூர் வார்டு) போட்டியிட்டார். தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை விவரங்கள் வெளிவந்துள்ளன. இதில், மொத்தமுள்ள 265 வாக்குகளில், கிச்சி 133 வாக்குகளை பெற்றார். லால் 130 வாக்குகளே பெற்றார். 2 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டன. இதனால், 3 வாக்குகள் வித்தியாசத்தில் கிச்சி திரில் வெற்றி பெற்றுள்ளார்.



கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் 71ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 2024 துவக்க நாளான நேற்று (14.11.2024) சிவகங்கை மாவட்டம், காஞ்சிராங்காலில் உள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்தில் கூட்டுறவுக் கொடியினை ஏற்றி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷா அஜித் உள்ளார்

### நாகையில் என்.கௌதமன் பங்கேற்பு!

## ஓவியக் கலையின் திறமையை மேம்படுத்த “பொன்னி சித்திரக் கடல்” கூடம்!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

நாகை, நவ.15-

நாகை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் மாவட்டக் கல்வி தன்முனைப்புத் திட்டமானது பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் மாணவர்களின் படைப்பாற்றல் திறமையை மேம்படுத்தும் விதமாக அரசு பள்ளி மாணவர்களின் ஓவியத் திறனை மேம்படுத்த நாகை நீலா தெற்கு வீதியில் நூற்றாண்டு பழமை வாய்ந்த, அதன் சிறப்புத் தன்மை குறையாமல் அப்படியே புதுப்பித்து “பொன்னி சித்திரக் கடல்” கூடம் பொன்னி சித்திரக் கூடத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு ஓவியக் கலையின் அனைத்து வகைமைகளும் முற்றிலும் இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். இம்மையமானது வார விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்கும். ஓவியக்கலையில் சிறந்து விளங்கும் ஓவிய ஆசிரியர்களால் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் தமிழ்நாட்டில் ஓவியக் கலையில் சிறந்து விளங்கும் கலைஞர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படும்.

இந்த பொன்னி சித்திரக் கூடத்தினை நாகை மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன்;, நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், நாகை நகரக்கழக செயலாளர், நகர மன்ற தலைவர் த. இரா.மாரிமுத்து, நாகூர் நகரக் கழக செயலாளர் எம். ஆர். செந்தில்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, நகர் மன்ற உறுப்பினர் நம்பியார் நகர் சுரேஷ், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஏ.கணேசன், நாகை நகராட்சி.டி.லீனா சைமன், மாவட்டக் கல்வி தன்முனைப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆதி உதயகுமார், மாவட்டக் கல்வித் தன்முனைப்புத் திட்ட ஆசிரிய தூதுவர்கள், ஓவிய பயிற்சி ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



121வது வட்டத்தில் மயிலை மேற்கு பகுதிக்கு உட்பட்ட பாகமுகவர்கள் கூட்டம் மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில், வட்டச் செயலாளர் டி.ராஜவேலு தலைமையில் நடைபெற்றது. மயிலை தொகுதி மேற்பார்வையாளர் மாநில தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் ஆலோசனை வழங்கினார். இதில் பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன், பி.எல்.ஏ.2, வட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நகர் முத்து மாரியம்மன் திருக்கோயிலுக்கு

## ரூ.32.75 லட்சம் மதிப்பீட்டில் புதிய இராஜகோபுரம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்!

சென்னை, நவ.15-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.11.2024) சென்னை, கலைஞர் நகர், அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயிலில் ரூ. 32.75 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய இராஜகோபுர திருப்பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

சென்னை, கலைஞர் நகரில் அமைந்துள்ள அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில் 50 ஆண்டுகள் பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயி லுக்கு கடந்த 09.07.2009 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது ரூ.32.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இராஜகோபுரம் கட்டும் பணி, ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் மூலவர் சன்னதி மற்றும் விமானம் அமைக்கும் பணி மற்றும் ரூ.25.50 லட்சம் மதிப்பீட்டில் மகா மண்டபம் கட்டும் பணி என மொத்தம் ரூ.83.25 லட்சம் மதிப்பீட்டில் கொள்ளப்பட உள்ளன. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று புதிய இராஜகோபுரம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேசன், திருக்கோயில் அறங்காவலரும் லண்டன் கிரைடன் துணை மேயருமான தாமோதரன் சீனிவாசன், அறங்காவலர் ஜெயசேகரன் சீனிவாசன், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாமன்ற உறுப்பினர் க.தனசேகரன் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வார்டு 43 – திருவள்ளுவர் நகர் குடிசைப்பகுதியில் பட்டாசு தீயினால் குடிசைகள் எரிந்து பாதிப்புக்குள்ளானது. தகவல் அறிந்ததும் நேரில் சென்று பாதிப்புகளை ஆய்வுசெய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் சொந்த நிதியிலிருந்து நிதி உதவி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன் ஆர்.கே.நகர் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெங்கிடங்கால் சந்தானம்
### நவம்பர் 15 (2005)



நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில்

## அ.தி.மு.க. - பா.ம.க. - தே.மு.தி.க. கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

கடலூர், நவ. 15 -

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம், சந்தை வெளி பேட்டை கிராமத்தைச் சேர்ந்த மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பாக்கியலட்சுமி கல்யாண சுந்தரம் தலைமையில், அ.தி.மு.க. அழகேசன், குமார், பா.ம.க. பிரகாஷ், துரை, உதயகுமார், வசந்தா, த.வா.க. பார்த்திபன், மோகனா, விமலாதேவி ராஜேஸ்வரி, ராதிகா உள்ளிட்ட அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க., த.வா.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட பல்வேறு கட்சியில் இருந்து விலகி சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னி லையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

இதனைத் தொடர்ந்து பண்ருட்டி ஒன்றியம் மேட்டு குப்பம் கிராமத்தைச் சேர்ந்த தேமுதிக சக்திவேல், த.வா.க கனகவேல், பா.ம.க சந்தோஷ்குமார், ஜெயராமன், அ.தி.மு.க. சாமிதுரை, தே.மு.தி.க. உத்திராட்சம் உள்ளிட்ட சுமார் 60க்கும் மேற்பட்டோர் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னி லையில் கழகத்தில் இணைந்தனர். கட்சியில் இணைந்தவர்களை வரவேற்று சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பேசுகையில், தி.மு.க.வில் புதிதாக இணைந்த அனைவருக்கும் பல்வேறு பதவிகள் வர வாய்ப்புள்ளது. குறிப்பாக கட்சியில் உழைப்பவர்களுக்கு வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட வாய்ப்பு தரப்படும் என பேசினார். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் உறுப்பினர் படிவங்களை வழங்கினார்.



சென்னை மாநகராட்சி வேளச்சேரி வார்டு 175ல் பணிபுரியும் மாநகராட்சி ஊழியர் ஜெயராமனின் மகள் மாற்றுத் திறனாளியான ஜெ.பவித்ராவுக்கு 175 ஆவது வார்டு மாமன்ற உறுப்பி னர் திருமதி மகேஸ்வரி முருகவேல் கல்வி நிதி உதவி வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை டி. சுந்தரம்
### நவம்பர் 15 (2012)



புதுக்கோட்டை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகத் துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராக தொடர்ந்து 25 ஆண்டுகளாக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுக்கோட்டை அர்பன் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் தொடர்ந்து இயக்குநராகவும் – ஒருமுறை துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உழைப்பும், தியாகமும், நேர்மையும் இருந்தால் மட்டுமே உள்ளூரில் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக வரமுடியும் என்பதை நிரூபித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**